www.Padasalai.Net www.TrbTnpsc.com

V12Eco

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2023

வகுப்பு 12
பொருளியல்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1) ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக
அ) உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
இ) உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை

2) ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ..........
அ) தனிநபர் வருமானம் ஆ) தலைவீத வருமானம்
இ) பணவீக்க வீதம் ஈ) செலவிடக்கூடிய வருமானம்

3) மூன்றாம் துறை ............. எனவும் அழைக்கப்படுகிறது.
அ) பணிகள் ஆ) வருமானம் இ) தொழில் ஈ) உற்பத்தி

4) தொகுத் தேவையின் கூறு ........... ஆகும்
அ) தனிநபர்தேவை ஆ) அரசுச் செலவு
இ) ஏற்றுமதி மட்டும் ஈ) இறக்குமதி மட்டும்

5) வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றி கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு ........... ஆகும்.
அ) தொகுத்தேவை ஆ) தொகு அளிப்பு
இ) விளைவு தேவை ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு

6) பெருக்கியின் மதிப்பு =
அ) 1/(1-MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ

7) மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுக்கும் செலவுக்கும் உள்ள தொடர்பு
அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு
இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு

8) பற்று அட்டை என்பது ............. உதாரணம் ஆகும்.
அ) கட்டளைப்பண ஆ) காகிதபண இ) நெகிழிபண ஈ) கடன் பண

9) மையவங்கி நாட்டின் ............. அதிகார அமைப்பு
அ) பணவியல் ஆ) நிதியியல்
இ) கூலி ஈ) தேசிய வருவாய்

10) ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ) அந்நிய செலாவணி விகிதம்
ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

11) கீழ்காண்பவர்களில் யார் ஒற்றை காரணி வாணிக வீதத்தை வடிவமைத்தவர்
அ) ஜேக்கப் வைனர் ஆ) G.S.டோரன்ஸ்
இ) எப்.டபில்யூ. ஆட்சிக் ஈ) ஜே.எஸ்.மில்

12) நீண்ட கால கடன் வழங்கும் நிதி நிறுவனம்
அ) உலக வங்கி ஆ) பன்னாட்டு பண நிதியம்
இ) உலக வாணிக அமைப்பு ஈ) பிரிக்ஸ்

13) கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?
அ) தனி மனிதர் வருமான வரி ஆ) நிறுவன வரி
இ) வேளாண்மை வருமான வரி ஈ) கலால் வரி

14) வருவாய் செலவு வருவாய் வரவை விட அதிகமாக இருந்தால்,அது
அ) வருவாய் பற்றாக்குறை ஆ) நிதிபற்றாக்குறை
இ) வரவு செலவு பற்றாக்குறை ஈ) அடிப்படை பற்றாக்குறை

15) வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது?
அ) மரம் வெட்டும் தொழில் ஆ) இயற்கை வன அழிவு
இ) நிலத்தை சமப்படுத்துதல் ஈ) தட்பவெப்ப நிலை சமப்படுத்துதல்

16) நீடித்த வளர்ச்சி அல்லது வளம் குன்றா வளர்ச்சி குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் ..............
அ) 2020 ஆ) 2025 இ) 2030 ஈ) 2050

17) நீண்ட கால திட்டத்தின் மற்றொரு பெயர்
அ) மேம்பாட்டு திட்டம் ஆ) மேம்பாடு இல்லாத திட்டம்
இ) முன்னோக்கு திட்டம் ஈ) முன்னோக்கமற்ற திட்டம்

18) நிதி ஆயோக் கீழ்க்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது?
அ) குடியரசுத் தலைவரின் அவரச ஆணை ஆ) குடியரசுத் தலைவரின் சுற்றறிக்கை
இ) அமைச்சரவை தீர்மானம் ஈ) இவை எதுவுமில்லை

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

19) உடன் தொடர்பு கெழு y-யின் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்
அ) 0 மற்றும் 1 ஆ) –1 மற்றும் 0 இ) –1 மற்றும் 1 ஈ) –0.5 மற்றும் 0.5

20) U என்பது .........
அ) விலகல் ஆ) திட்ட பிழை
இ) பிழை கருத்து ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

## பகுதி - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் : 30 கட்டாய வினா)** **7×2=14**

21) இரு துறை பொருளாதாரம் வருமான வட்ட ஓட்ட ஓட்டத்தை குறிக்கும் வரைபடம் வரைக.
22) GNPக்கும் NNPக்கும் இடையே உள்ள தொடர்பினை எழுதுக.
23) ஊரக வேலையின்மை இயல்பு யாது?
24) மெய்நிகர் பணம் சிறுகுறிப்பு வரைக.
25) வணிக வங்கிகள் என்பதனை வரையறுக்க.
26) உறுப்பு நாடுகளுக்கான ஐபிஆர் டியின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களை பெயர்களைச் சுட்டி காட்டுக.
27) நுகர்வு சார்வு என்றால் என்ன?
28) சூழலியல் என்றால் என்ன?
29) ஒட்டுறவு என்பதன் வரையறு.
30) 'நொண்டி வாத்து' வரவு செலவுத் திட்டம் என்றால் என்ன?

## பகுதி - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் : 40 கட்டாய வினா)** **7×3=21**

31) சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.
32) தொன்மையியத்தைத்திற்கும் கீன்ஸியனிலித்திற்கும் இடையே வேறுபாடுகளை ஏதேனும் 5 எழுதுக.
33) கீன்ஸின் நுகர்பு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்களை கூறுக.
34) பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
35) மலிவு பணக் கொள்கை அருமை பணக்கொள்கையில் இருந்து வேறுபடுத்துக.
36) வெளிநாட்டு நேரடி முதலீட்டு நோக்கங்களை குறிப்பிடுக.
37) வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை கூறுக.
38) வறுமை நச்சு சுழற்சியை எவ்வாறு தடுப்பாய்?
39) புள்ளியியலின் பணிகள் யாவை?
40) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள ஒரு சில புள்ளி விவர சிக்கல்களை பட்டியலிடுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.** **7×5=35**

41) அ) பேரின பொருளியலின் பரப்பள்ளையை விவரிக்க.
**(அல்லது)**
ஆ) ஒப்புமை செலவுக்கோட்பாட்டினை ஆய்வு செய்க

42) அ) பொருளாதார ஆய்வில் சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவரிக்க.
**(அல்லது)**
ஆ) பொதுநிதியின் எல்லையை விளக்குக.

43) அ) ADF மற்றும் ASFக்கும் இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரிக்க.
**(அல்லது)**
ஆ) நீர் மாசுபடுதலின் விளைவுகள் மற்றும் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய தீர்வுகளை விவரிக்க.

44) அ) நுகர்வு சார்வின் அகக்காரணிகளை விளக்கவும்.
**(அல்லது)**
ஆ) புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

45) அ) பணத்தின் பணிகளை விவரிக்க.
**(அல்லது)**
ஆ) வணிக வங்கிகளின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பணிகளை விவரிக்க.

46) அ) இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் WTO பங்கினை விவாதிக்க.
**(அல்லது)**
ஆ) முடுக்கி இயங்கும் விதத்தினை விவரிக்க.

47) அ) திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்
**(அல்லது)**
ஆ) நடவடிக்கைகளின் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரிக்க.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com